# அருள்மிகு சிவன் கோவில்
# சைவத் தமிழ்ச் சங்கம்

www.sivankovil.ch www.anpesivam.com www.sivantv.com

## 5வயது பிரிவு

- தேவார மனனப்போட்டி.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈச னெந்தை யிணையடி நீழலே.**

பொழிப்புரை:

இறைவனாகிய எந்தையின் திருவடி நீழல் குற்றமற்ற வீணையின் நாதமும், மாலையிலே தோன்றிய நிலவின் தண்மையும், வீசுகின்ற தென்றலின் சாயலும், செறிந்த இளவேனிலின் மாட்சியும், ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியும் போன்று இன்பம் பயப்பதாகும்.

**நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்**
**நமச்சி வாயவே நானறி விச்சையும்**
**நமச்சி வாயவே நாநவின் றேத்துமே**
**நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.**

பொழிப்புரை:

ஞானமும், கல்வியும், நானறிந்த வித்தையும் பஞ்சாட்சரமே நா கூறி வழிபடுவதும் அதனையே நன்னெறி காட்டுவதும் அத்திருமந்திரமேயாகும்.

- **ஆத்திசூடி முதல் 12 வரிகள்.**

கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

உயிர் வருக்கம்

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகம் சுருக்கேல்

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

**உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.**